பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
22 08 2024 12 40
வியாழக்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

- தேசிய அறிவியல் விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று வழங்கினார்.
- பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று போலந்து பிரதமர் திரு. **Donald Tusk** மற்றும் அந்நாட்டு அதிபர் திரு. **Andrzej Duda** உடன் பேச்சுவார்த்தை நடத்துகிறார்
- வக்ஃப் வாரிய சட்டத்திருத்த மசோதா தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் முதலாவது கூட்டம் புதுதில்லியில் தற்போது நடைபெற்று வருகிறது.
- ஆந்திர மாநிலம் அனகாபல்லி மாவட்டத்தில் நேரிட்ட மருந்து நிறுவன வெடி விபத்தில் 17 பேர் உயிரிழந்தனர்.
- 17 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியின் மகளிர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் நான்கு மல்யுத்த வீராங்கனைகள் இன்று விளையாடுகின்றனர்.

*--- இனி விரிவான செய்திகள் --*

<<<<>>>>

தேசிய அறிவியல் விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று வழங்கினார்.

குடியரசுத்தலைவர் மாளிகையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியல் அறிவியலில் சிறந்து விளங்கும் 33 பேருக்கு அவர் இந்த விருதுகளை வழங்கினார்.

இயற்பியல், வேதியியல், மருத்துவம், சுற்றுச்சூழல் உள்ளிட்ட 13 துறைகளில் சிறப்பாக பணியாற்றியதற்காக இந்த விருது வழங்கப்படுகிறது.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று போலந்து பிரதமர் திரு. **Donald Tusk** மற்றும் அந்நாட்டு அதிபர் திரு. **Andrzej Duda** உடன் பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார்.

இந்த பேச்சுவார்த்தையின்போது சர்வதேச விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

போலந்து நாட்டின் பாரம்பரிய முறைப்படி பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு இன்று வரவேற்பு அளிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து போலந்து நாட்டின் தொழில் துறையினருடனும் பிரதமர் கலந்துரையாடவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

வக்ஃப் வாரிய சட்டத்திருத்த மசோதா தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் முதலாவது கூட்டம் புதுதில்லியில் தற்போது நடைபெற்று வருகிறது.

திரு. ஜெகதாம்பிகாபால் தலைமையிலான இக்குழுவில் 31 பேர் இடம்பெற்றுள்ளனர்.

வக்ஃப் சட்டத்திருத்த மசோதா தொடர்பான பல்வேறு அம்சங்கள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்படுகிறது.

<<<<>>>>

ஆந்திர மாநிலம் அனகாபல்லி மாவட்டத்தில் உள்ள அச்சுதாபுரத்தில் மருந்து நிறுவனம் ஒன்றில் ஏற்பட்ட வெடி விபத்தில் 17 பேர் உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாயும், காயமடைந்தோருக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் பிரதமரின் தேசிய நிவாரண நிதியில் இருந்து வழங்கப்படும் என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த விபத்து குறித்து தகவல் அறிந்த அம்மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு காணொலி வாயிலாக தொழில்துறை, சுகாதாரத்துறை, சம்பந்தப்பட்ட மாவட்ட நிர்வாக அதிகாரிகள் ஆகியோருடன் ஆலோசனை நடத்தினார்.

விபத்துக்கான காரணம் குறித்தும், காயமடைந்தோருக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்தும் அவர் கேட்டறிந்தார்.

இந்த விபத்து தொடர்பாக உயர்நிலை விசாரணை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

விபத்து நேரிட்ட இடத்தை திரு. சந்திரபாபுய நாயுடு இன்று நேரில் பார்வையிட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ஒடிசாவில் இன்று காலை நேரிட்ட சாலை விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர். 20 பேர் காயமடைந்தனர்.

கன்ஜம் மாவட்டத்தில் சரக்கு வாகனத்துடன் பேருந்து மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாகவும், விபத்தில் காயமடைந்தோர் பெர்காம்பூர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருப்பதாகவும் காவல்துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தேசிய விண்வெளி தினம் நாளை கொண்டாடப்படுவதை அடுத்து விண்வெளி துறையின் எதிர்காலம் குறித்த கண்ணோட்டம் என்ற சிறப்பு நிகழ்ச்சிக்கு அகில இந்திய வானொலியின் மாநில செய்திப் பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

இந்நிகழ்ச்சி நாளை இரவு மணி 8.05 முதல் மணி 8.35 வரை முதன்மை மற்றும் எஃப்.எம். சேனல்களில் ஒலிபரப்பாகும்.

ஸ்பேஸ் கிட்ஸ் இந்தியாவின் நிறுவனர் டாக்டர் ஸ்ரீமதி கேசன் உடன் கலந்துரையாடுபவர் செய்தி ஆசிரியர் எஸ். ஜாய்.

<<<<>>>>

தமிழக அரசின் சார்பில் தரம் உயர்த்தப்பட்ட மாநில அவசர கால செயல்பாட்டு மையத்தை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் சென்னையில் இன்று திறந்து வைத்தார்.

5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்த மையமானது, பல்வகை பேரிடர்களுக்கான முன்னெச்சரிக்கைகளை வழங்கும் விதமாக 24 மணி நேரமும் செயல்படும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

முன்னதாக சென்னை தலைமைச் செயலகத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் உயர்கல்வி பயிலும் 120 மாணவ – மாணவியருக்கு முதலமைச்சரின் ஆராய்ச்சி படிப்பை தொடர்வதற்கான ஊக்கத்தொகை திட்டத்தின்கீழ் மாதம் ரூபாய் 25 ஆயிரம் ரொக்கத்தை 10 மாணவர்களுக்கு வழங்கி இத்திட்டத்தினை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சி வளாகத்தில் செய்தியாளர்களை சந்தித்த முதலமைச்சர், அமைச்சரவை விரிவாக்கம் குறித்து தமக்கு விவரங்கள் எதுவும் கிடையாது என்று கூறினார்.

<<<<>>>>

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் நடிகர் விஜய் இன்று தமது கட்சியின் கொடியை அறிமுகம் செய்தார்.

சென்னை அருகேயுள்ள பனையூரில் நடைபெற்ற தமது கட்சிக் கொடி அறிமுக நிகழ்ச்சியில் பேசிய அவர், சமத்துவமான சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையிலான உறுதிமொழியை அவர் செய்து வைத்தார்.

அடுத்த மாதம் தமது கட்சியின் சார்பில் விக்கிரவாண்டியில் முதல் மாநாடு நடைபெறும் என்று திரு. விஜய் அறிவித்தார்.

<<<<>>>>

ஆகாஷவாணி இசைவிழா சென்னை அகில இந்திய வானொலி நிலைய வளாகத்தின் பல்தட ஒலிப்பதிவு அரங்கத்தில் இன்று நடைபெறுகிறது.

புல்லாங்குழல் வித்வான் விஜயகோபால், நாதஸ்வர கலைஞர் மயிலை கார்த்திகேயன், மிருதங்க வித்வான் நடேசன், மோர்சிங் வித்வான் குருராஜ் ஆகியோர் பங்கேற்கும் நிகழ்ச்சி மாலை ஐந்து மணிக்கு நடைபெறுகிறது.

ஆறரை மணிக்கு நடைபெறும் நிகழ்ச்சியில் அக்கரை சகோதரிகளான சுபலஷ்மி மற்றும் சொர்ணலதாவின் பாட்டு இடம்பெறவுள்ளது.

இந்த பாட்டு நிகழ்ச்சியில் வயலின் இசைக்கலைஞர் ராகுலும், மிருதங்க வித்வான் சிவராமனும், கஞ்சிரா ஸ்ரீசுந்தர் குமாரும் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

பங்களாதேஷின் பொருளாதாரம் குறித்த வெள்ளை அறிக்கையை வெளியிட அந்நாட்டு இடைக்கால அரசு முடிவு செய்துள்ளது.

பொது நிதி, பணவீக்கம் மற்றும் உணவு மேலாண்மை உள்ளிட்ட 6 முக்கிய அம்சங்கள் குறித்து இந்த வெள்ளை அறிக்கையில் குறிப்பிடப்படும் என்று அது தெரிவித்துள்ளது.

இந்த வெள்ளை அறிக்கையை வெளியிடும் பொருளாதார நிபுணர் குழுவின் தலைவராக திரு. தேபப்பிரியா பட்டாச்சார்யா நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக அந்நாட்டு இடைக்கால அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்தக் குழு பொறுப்பேற்ற 90 நாட்களுக்குள் வெள்ளை அறிக்கை வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்நாட்டின் பொருளாதார நிலை, நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள் உட்பட பல்வேறு விஷயங்கள் இந்த அறிக்கையில் இடம்பெறும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

நாட்டின் கிழக்கு, மேற்கு, வடமேற்கு மத்திய பகுதிகளின் ஒருசில இடங்களில் அடுத்த 4 நாட்களுக்கு மிக அதிக அளவில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்னிந்திய மாநிலங்களில் அடுத்த 7 நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மாதம் 26ஆம் தேதி வரை பீஹார், உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கட், குஜராத், கோவா மற்றும் கொங்கன் மண்டலப் பகுதிகளில் கனமழை பெய்யும் என்றும் கூறியுள்ளது.

மேலும் அசாம், மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுராவில் அடுத்த 5 நாட்களுக்கு கனமழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் ஆப்பிரிக்காவுக்கு உரிய இடம் தராமல் மறுக்கப்படுவதற்கு இந்தியா எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

சியாராலியோனில் நடைபெற்ற பாதுகாப்பு கவுன்சிலின் உயர்மட்ட அளவிலான ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய அதன் இந்தியப் பிரநிதி திரு. ஆர். ரவீந்திரா, பாதுகாப்பு கவுன்சிலில் ஆப்பிரிக்காவின் இருப்புக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகத் தெரிவித்தார்.

<<<<>>>>

17 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியாவின் நான்கு மல்யுத்த வீராங்கனைகள் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

ஜோர்டானில் நடைபெற்று வரும் இப்போட்டியில் 43 கிலோ எடைப்பிரிவில் அதிதி குமாரியும், 57 கிலோ எடைப்பிரிவில் நேஹாவும், 65 கிலோ எடைப்பிரிவில் புல்கித்-தும், 73 கிலோ எடைப்பிரிவில் மான்சி லாதரும் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

இந்தியா ஏ – ஆஸ்திரேரியா ஏ மகளிர் அணிக்கு எதிரான அதிகாரபூர்வமற்ற டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்கியது.

கோல்டுகோஸ்ட் நகரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் முதலில் விளையாடிய ஆஸ்திரேலிய ஏ அணி முதல் இன்னிங்சில் 212 ரன்களுக்கு ஆட்டமிழந்தது.

இதைத்தொடர்ந்து தனது முதல் இன்னிங்சை ஆடி வரும் இந்தியா ஏ அணி, முதல் நாள் ஆட்ட முடிவில் 2 விக்கெட் இழப்புக்கு 100 ரன் எடுத்துள்ளது.

தாய்லாந்து சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 6-2, 6-2 என்ற செட் கணக்கில் சீனாவின் **Pengyu Lu**-ஐ வென்றார்.

இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கரும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<<<<>>>>

79-வது அகில இந்திய ரயில்வே கால்பந்து போட்டி இன்று சென்னையில் தொடங்குகிறது.

42 ஆண்டுகளுக்குப் பிறகு சென்னையில் இப்போட்டி நடைபெறவுள்ளதாக தெற்கு ரயில்வே கூறியுள்ளது.

13 ரயில்வே மண்டலங்ககளின் அணிகள் இதில் பங்கேற்கின்றன.

இப்போட்டி வரும் 31-ஆம் தேதி நடைபெறுகிறது.

<<<<>>>>

அல்டிமேட் டேபிள் டென்னிஸ் போட்டி சென்னையில் இன்று தொடங்குகிறது.

அடுத்த மாதம் ஏழாம் தேதி வரை நடைபெறவுள்ள இப்போட்டியில் சென்னை, அகமதாபாத், தில்லி, கோவா, ஜெய்ப்பூர், பெங்களூரு, புனே, மும்பை ஆகிய எட்டு அணிகள் பங்கேற்கின்றன.

இன்று நடைபெறும் தொடக்க ஆட்டத்தில் கோவா – ஜெய்ப்பூர் அணிகள் மோதுகின்றன.

<<<<>>>>